**OS.No**. 278/2021

**PW** 1- திருமூர்த்தி த/பெ. ராமசாமி

நாள். 24.08.2023

<u>வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். அது யார் சொல்லி தயாரிக்கப்பட்டது என்றால் நான் சொல்லித்தான் தயாரிக்கப்பட்டது. என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாதி பாகம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். என்னுடைன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 4 தங்கைகள். என்னுடைய தாயார் மூத்த குடிமக்கள் சட்டத்தின் கீழ் பராமரிப்பு மற்றும் ஜீவனம்சம் வேண்டும் என கேட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு அளித்தன் பேரில் விசாரணை நடைபெற்று விசாரணையில் ரூ.10,000 ஜீவனம்சம் வழங்க உத்தரவிடப்பட்டு இருந்தது என்றால் ஆமாம். அதன்படி சில மாதம் கொடுத்தேன் பின்னிட்டு குடும்ப சூழ்நிலைய காரணமாக கொடுக்கவில்லை. அவ்வாறு நான் சில மாதம் கொடுத்தற்கான ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. நான் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை கேட்டு ஆட்சியர் அலுவலகத்தில் என்னுடைய தாயார் மனு அளித்துள்ளார் என்றால் ஆமாம். எனக்கு உடல் நிலை சரியில்லை என்பதால் கொடுக்க முடியவில்லை என சொல்லிவிட்டேன். பின்னர் ரூ3000 மட்டும் தரமுடியும் என்று சொன்னேன் பின்னிட்டு அதையும் என்னால் தரமுடியவில்லை. அவ்வாறு ரூ3000 செலுத்த பிறப்பித்த உத்தரவு உள்ளதா என்றால் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.

2. என்னுடைய தாயாருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டு படுத்தப்படுக்கையாக உள்ளார் என்றால் ஆமாம். நான் அவரை சென்று பார்க்கவில்லை என்றால் என்னை பார்க்கவிடுவது இல்லை. நானே என்னுடைய தாயாரை பார்த்துக்கொள்ளவதாக கேட்டேன் அதற்கும் விடவில்லை. மருத்துவ செலவிற்கும் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் கொடுத்தேன். தற்போது எதுவும் கொடுக்கவில்லை. என்னுடைய தாயாரின் மருத்துவ செலவிற்கும் நான் எந்த செலவும் செய்யவில்லை என்றாலும் என்னுடைய சகோதரிகள் தான் செலவு செய்து தான் பராமரித்து வருகிறார்

என்றால் சரியல்ல. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 5 ஆம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு என்ன வயதாகிறது என்றால் 62. என்னுடைய தகப்பனார் ஸ்ரீ மீனாட்சி ரெடிமெட்ஸ் கடையை நடத்தி வந்தார் என்றால் இல்லை நான் தான்பார்த்து வந்தேன். மேற்படி கடையை கூட்டுக் குடும்ப நடத்தி வந்தோம் என்றால் ஆமாம்.என்னுடைய அப்பாவும் சித்தப்பாவும் நடத்தி வந்து எங்களது வீட்டில் 4 பெண் பிள்ளைகள் என்பதால் என்னையே பார்த்துக்கொள்ளுமாறு என்னுடைய சித்தப்பா சொல்லிவிட்டார்.

3. பிரதிவாதி பெயரில் வா.த.சா 1 கிரய பத்திரம் பெறப்பட்டுள்ளது என்றால் வீட்டிற்கு மூத்தவர் என்பதால் அவருடைய பெயரில் பெறப்பட்டுள்ளது. மேற்படி கிரய பத்திரத்தில் நடராஜ் மற்றும் சாமியப்பன் கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் சாமியப்பன் என்னுடைய மாமா அவர் இறந்துவிட்டார். வா.த.சா 1 கிரய பத்திரத்தில் கிரய தொகையை நான் செலுத்தியதாகவோ வீட்டிற்கு மூத்தவர் என்பதால் பிரதிவாதி பெயரில் கிரயம் பெறப்படுவதாகவோ குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 6.9.2001 ல் யார் யாரிடமிருந்து கிரயம் வாங்கினார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் மேற்படி தேதியில் பணம் கொடுத்தற்கான ஆவணம் ஏதவாது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணம் எதுவும் இல்லை. தாவா சொத்தை கிரயம் பெறுவதற்காக நான் ஒரு பைசா கூட தொகை எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் அது பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்றாலும் சரியல்ல. வா.த.சா 1 ன் படி பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்பதால் அதில் நான் எந்த பாகமும் கோர இயலாது என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தின் சுவாதீனத்தில் உள்ளேன் என்பதை காட்டுவதற்கு ஆவணம் ஏதவாது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் காலியிடமாக தான் உள்ளது. காலியிடத்திற்கு தீர்வை செலுத்தியுள்ளேனா என்றால் இல்லை.

4. வா.த.சா 2 பட்டா என்னுடைய தாயார் பெயரில் உள்ளது என்றால் ஆமாம். என்னுடைய தாயாருக்கு தெரியாமல் வா.த.சா 1 அசல் ஆவணத்தை சட்டவிரோதமாக எடுத்துச்சென்று விட்டேன் என்றால் சரியல்ல. என்னுடைய தாயார் தான் கொடுத்தார். 25.8.2021 ம் தேதி தாவா சொத்தை என்னுடைய தாயார் 3ம் நபருக்கு விற்பனை செய்ய நிலத்தை அளவீடு செய்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அவ்வாறு விற்பனை செய்ய வேண்டிய சூழ்நிலை எதுவும் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய தகப்பனார் திருப்பூர் பழைய பஸ் நிலையத்தில் கடை நடத்தி

வந்தார் என்றால் சரியல்ல. நான் தான் நடத்தி வந்தேன் என்னுடைய தகப்பனார் இறந்த பிறகு அதன் வாடகையை செலுத்த முடியவில்லை என்பதால் கடையை காலி செய்ய கோரி மாநகராட்சியில் இருந்து அறிவிப்பு கொடுத்தார்கள் என்றால் இல்லை. புதிதாக பேருந்து நிலையம் கட்ட இருப்பதால் காலி செய்ய சொல்லிதான் கொடுத்தார்கள். கட்டிய பிறகு மீண்டும் எங்களுக்கே தருவதாக சொன்னார்கள் ஆனால் அதன் படி தரவில்லை.

5. என்னுடைய தகப்பனார் பெயரில் திருப்பூர் ஓடக்காட்டில் பூர்விக சொத்து இருந்ததா என்றால் ஆமாம். அது என்னுடைய தகப்பனார் இருந்தபோதே விற்றுவிட்டார் என்றால் ஆமாம். மேற்படி சொத்தை விற்றுவிட்டு அங்கேரிபாளையத்தில் வேறு பூமி வாங்கினார். அது ஆவண எண் 375/1997 என்றால் எண் ஞாபகம்இல்லை. அது ஒரு ஏக்கர் 10 செண்ட் என்றால் ஒரு ஏக்கர் 21 செண்ட். அந்த சொத்தை விற்பனை செய்து தொகை முழுவதையும் என்னுடைய தகப்பனார் எனக்கு கொடுத்துவிட்டார் என்றால் இல்லை. Screen printing தொழில் தான் முதலீடு செய்தார். நான் கூறுவது போல் என்னுடைய தகப்பனார் Screen printing தொழில் எதுவும் செய்யவில்லை என்றாலும் சொத்தை விற்பனை செய்து தொகை முழுவதையும் எனக்கு தான் கொடுத்தார் என்றாலும் சரியல்ல. 11.9.2020 முதல் 5.10.2020 வரை என்னுடைய தாயார் மருத்துவமனையில் இருந்த போது நான் பார்க்கவில்லை என்றாலும் மருத்துவ செலவிற்கு எந்த தொகையும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எனக்கு தாவா சொத்தை பொறுத்து எந்த உரிமையும் பாகமும் கோர இயலாது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

ஒம்/– M.மேகலாமைதிலி
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.